STC.No.116/2025 DW1. சந்திரசேகர்
தேதி– 15.09.2025
புகார்தாரரர் ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தேவராஜ் அம்பிகா மேல்மாடி, கல்கட்டி களம், நாகமணி அம்மாள் பள்ளிக்கு பின்புறம், கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். மேற்படி முகவரியில் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறேன் என்றால் 1 வருடமாக குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு எங்கு குடியிருந்தேன் என்றால் கோட்டை மாரியம்மன் கோவில் அருகில் 2 வருடமாக குடியிருந்தேன். நான் B.SC Botany படித்துள்ளேன். நான் தனியார் SMFG நிறுவனத்தின் வேலை பார்க்கிறேன். டிரெடிங் சம்மந்தமான வேலை பார்க்கிறேன். இதற்கு முன்பு நான் திருப்பூரில் லேப்பில் வேலை பார்த்தேன். ESAF வங்கியில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான், 2 வருடமாக சின்னமனூரில் வேலை பார்த்தேன்.

2. மேற்படி வங்கியில் எனக்கு வேலை என்றால் பணம் வசூல் செய்யும் வேலையாகும். நான் வங்கியில் வேலை பார்ப்பதால் காசோலை கையாளும் விதம் தெரியும் என்றால் தெரியாது. நான் வங்கியில் வேலை பார்ப்பதால் காசோலை கையாளும் விதம் தெரியும் என்றும், தற்போது தெரியாது என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் தாவா காசோலையானது வங்கியில் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா காசோலையில் எவ்வளவு தொகை குறிப்பிட்டுள்ளது என்றால் ரூ.5 லட்சம் என எழுதியுள்ளது. நான் எழுதவில்லை.

3. தாவா காசோலையானது என்ன காரணம் குறித்து திருப்பப்பட்டுள்ளது என்றால் Signature Differes என்று திருப்பப்பட்டுள்ளது. நான் வேண்டுமென்றே கையொப்பத்தை மாற்றி காசோலையில் போட்டுள்ளேன் என்றால் இல்லை. நான் காசோலையில் கையொப்பம் செய்யவில்லை. வாதியிடம் நான் ரூ.5 லட்சத்தை கைமாற்று கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக தாவா காசோலையை புகார்தாரரிடம்

கொடுத்து வங்கியின் மூலம் பணத்தை திருப்பி செலுத்திவிடுவதாக கூறி கையொப்பத்தை மாற்றி செய்து வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் காசோலையை கொடுத்ததாக சொல்லப்படும் அருண்குமார் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ரவிசாஸ்த்திரி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, புகார் கொடுக்க சென்றபோது மிரட்டினார்.

4. புகார்தாரரின் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் புகார்தாரரிடம் பணம் பெற்று மோசடி செய்ய வேண்டும் என்று பொய்யான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நேரில் வந்து பார்க்கபோனேன். எனக்கு கடன் வாங்கும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. ரவிசாஸ்த்திரியிடம் மட்டும்தான் பணம் வாங்கி அதனையும் திருப்பி செலுத்திவிட்டேன். கடன் வாங்குவது எனக்கு பழக்கம் என்றும், வாங்கிய கடனை திருப்பி கொடுக்ககூடாது என மோசடியாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பில் உள்ள விபரங்கள் உண்மை என்பதால் தான் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. இல்லையென்றால் நான் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எனது மைத்துனரை சாட்சியாக விசாரிக்க கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2025.09.15 18:47:24 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam